நடைமுறையில் நிறைவேறாமல் இருக்கிற பாதகங்களை விவாதிப்பதன் மூலம் மேலும் அத்திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்குத் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைதான் ஏற்கனவே நடைபெற்று மீண்டும் நடைபெறுவதாக உள்ளது. State Labour Advisory Board என்பது அதுதான். எல்லாத் தலைவர்களும் அதிலே இருக்கிறார்கள்.

வேலை இல்லாதவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் வேலை தருவது.

283—(*வினா எண். 6803) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை இல்லாதவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாங்கித் தருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் அரசாங்க அலுவலில் இருந்து ரிடையர் ஆனவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தனியார் நிறுவனங்களிலே குறிப்பிட்ட வயது வரம்பு வரையில்தான்—எப்படி அரசு வேலையில் குறிப்பிட்ட வயது வரம்பு வரையில் வேலை பார்க்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போன்று—வேலை பார்க்கலாம் என்ற அடிப்படையில் அரசு செயல்படுத்துமா? அது மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களில் சில முதலாளிகள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்தச் சமுதாயத்தைச்

1987 ஏப்ரல் 4]

சேர்ந்தவர்களையே வேலைக்கு அமர்த்துகிறார்கள். இதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்காக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக, அரசாங்கத்தின் மூலமாக வேலைக்கு ஆள் எடுக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத தனியார் நிறுவனங்கள்மீது தடை விதிக்க அரசு ஆய்வு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் தனியார் நிறுவனங்களிலே வேலைக்கு அமர்த்தப்படுவது குறித்து தனிக் கேள்வி போட்டு அதற்கென்று இருக்கிற துறையின் மூலம் தான் பதில் பெற முடியும். ஆனால் வேலை வாய்ப்பகங்களின் மூலமாக தனியார் நிறுவனங்கள் ஆட்களை நியமிக்க வேண்டுமென்பதை இன்றுள்ள சட்டத்தின்படி நாம் அமல்படுத்த முடியாது. மத்திய அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் ஒருவேளை அதற்கு வாய்ப்பு இருக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர மாநில சர்க்கார் வற்புறுத்துமா ? வெளிமாநிலங்களில் தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன, வெளி நாடுகளில் தனியார் நிறுவ நிறுவனங்கள் இருக்கின்றன. வெளி நாடுகளில் இருக்கின்ற நிறுவனங்களிலே பெரிய வேலைகளுக்கு அரசாங்கமே ஒரு நிறுவனத்தை வைத்து வேலை வாங்கித் தருகிறார்கள். ஆனால் சிறிய வேலைகளுக்கு அந்த மாதிரி ஏற்பாடு கிடையாது. அதனால் சிறிய வேலைகளுக்கும் அரசாங்கம் ஒரு நிறுவனத்தை ஏற்பாடு செய்து வெளிநாடுகளில், வெளிமாநிலங்களில் வேலை வாங்கித் தருவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே இருக்கின்ற நிறுவனங்களும் வேலைவாய்ப்பகங்களின் மூலமாகவே தங்களுக்கு வேண்டியவர்களை நியமிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தும். அதற்குரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்ளும். Over seas Man Power Corporation வெளிநாடுகளிலே எத்தகையவர்கள் தேவைப்படுகிறார்களோ அவர்களைப்

பெற்று அனுப்புகிற வேலையில் இருக்கிறது. அதிலே உயர்ந்த உத்தியோகம், தாழ்ந்த உத்தியோகம் என்று இல்லை. வெளிநாடுகளிலே எத்தகையவர்கள் தேவைப்படுகிறார்களோ அத்தகையவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே அந்த வேறுபாடு இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்ற நிறுவனத்தைப்போல் தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிவதோடு வேலைவாய்ப்பகத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்ய வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் முன்பே குறிப்பிட்டேன். வேலைவாய்ப்பகங்கள் என்று வைத்துக்கொண்டு பட்டியல்களைத் தயாரித்து வைத்துக்கொண்டிருக்கிறபோது, பதிவு செய்து வைத்துக்கொண்டிருக்கிறபோது, முறைப்படி அதைப் பராமரிக்கிறபோது அவர்களிலிருந்துதான் தனியார் நிறுவனங்களும் ஆட்களை அமர்த்தவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்கு இப்போது வழியில்லை. அவர்களிலிருந்து நியமிக்க வேண்டுமென்ற வகையிலே இந்திய அரசு சட்டத் திருத்தம் கொண்டுவருமானால் பெருமளவுக்கு வேலைவாய்ப்பை முறைப்படுத்துவதாக அமையும். ஆகவே தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகிற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்ற அளவுக்கு இந்திய அரசை இந்த அரசு வற்புறுத்தும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் குறைந்தபட்சம் 80 சதவீதம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அந்த நிறுவனங்களைக் கேட்டுக் கொள்வதாகப் பத்திரிகையில் செய்தி படித்ததாக எனக்கு ஞாபகம். அந்த வகையில் அந்த நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கி குறைந்தபட்சம் 80 சதவிகிதம் உள்ளூர்க்காரர்களுக்கு ஒதுக்கீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் அவர்களை வலியுறுத்துமா?

1987 ஏப்ரல் 4]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனியார் நிறுவனங்களை நாம் கேட்டுக்கொள்ளுகின்ற இடத்திலே தான் இருக்கிறோம். வரிச் சலுகை, நிலம், மின்சாரம், குடிநீர் வசதி இதுபோன்ற எல்லா வசதிகளையும் கொடுத்துவிட்டு, வேலைக்கு ஆள் எடுக்கும்போது அவர்கள் விருப்பப்படி யாரை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், அவர்கள் எந்த முறையையும் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்ற ஒருதலைப் போக்கு இருக்கிறது. அதை மாற்ற விரும்புகிறேன். கேட்டுக் கேட்டுப் பயனில்லை. மயிலே மயிலே என்றால் இறகு போடாது.

புதுக்கோட்டை, காமராஜபுரம் அனைத்துப் பகுதிகளுக்குச் சாலை, குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகள்.

284—(*வினா எண். 10378) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, காமராஜபுரம் அனைத்துப் பகுதிகளுக்கும் சாலை வசதிகள், குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): காமராஜபுரத்தில் மொத்தமுள்ள 36 வீதிகளில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 10 வீதிகளுக்கு மட்டும் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 தெருக்கள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. எனினும், பொதுமக்கள் நலன் கருதி லாரி மூலம் எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தெருவிளக்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இன்னும் 26 வீதிகள் நகராட்சியிடம் ஒப்படைக்கப்படவில்லை